# SIMPLE INTEREST TEST

1. Mala invested Rs. 5,000 for two years at 11% per annum. Find the total amount received by her at the end of 2 years.
   மாலா ஆண்டிற்கு 11% வட்டி வீதத்தில் ரூ 5,000 ஐ இரண்டு ஆண்டுகளுக்கு முதலீடு செய்கின்றார். இரண்டாம் ஆண்டின் முடிவில் அவர் பெறும் மொத்தத் தொகையைக் காண்க.
   a. Rs. 5,100 b. Rs. 6,200 c. Rs. 6,100 d. Rs. 5,200

2. A certain sum of money amounts to Rs. 6,372 in 3 years at 6% on simple interest. Find the principal.
   ஒரு குறிப்பிட்ட தொகையானது 6% தனிவட்டி வீதத்தில் 3 ஆண்டுகளில் ரூ 6,372 ஆகிறது எனில் அசலைக் காண்க.
   a. Rs. 5,000 b. Rs. 4,500 c. Rs. 5,400 d. Rs. 4,000

3. A certain sum of money amounts to Rs. 8,880 in 6 yrs and Rs. 7,920 in 4 years respectively. Find the principal
   ஒரு குறிப்பிட்ட அசலானது 6 ஆண்டுகளில் ₹ 8,880 ஆகவும் 4 ஆண்டுகளில் ₹ 7,920 ஆகவும் மாறுகிறது எனில் அசலைக் காண்க.
   a. Rs. 12,000 b. Rs. 6,880 c. Rs. 6,000 d. Rs. 5,780

4. At what rate of interest a sum of money doubles itself in 10 years in simple interest?
   ஒரு தொகையானது தனிவட்டி முறையில் 10 வருடத்தில் இரட்டிப்பாக ஆக வட்டி வீதம் என்னவாக இருக்க வேண்டும்?
   a. 10% b. 20% c. 50% d. 25%

5. Simple interest on a certain sum in $\frac{16}{25}$ of the sum. The rate percent, if the rate percent and time (in years) are equal, is
   ஒரு தொகைக்கான தனிவட்டியானது அத்தொகையின் $\frac{16}{25}$ மடங்காக உள்ளது. மேலும் வட்டியானது கால அளவிற்கு சமமாக இருந்தால் அந்த வட்டி எவ்வளவு?
   a. 6% b. 8% c. 10% c. 12%

6. Find the simple interest on Rs. 7,500 at 8% per annum per 1 year 6 months.
₹7,500 க்கு 8% வட்டி வீதம் ஒரு வருடம் 6 மாதங்களுக்கான தனி வட்டியைக் காண்க
a. Rs. 600 b. Rs. 700 c. Rs. 800 d. Rs. 900

7. The Simple interest on a certain sum for 3 years at 14% per annum is Rs. 235.20. The sum is?
ஒரு தொகையின் தனி வட்டி 3 ஆண்டுகளுக்கு ரூ.235.20 மேலும் வட்டி வீதம் 14% எனில் அத்தொகையின் மதிப்பு?
a. Rs. 480 b. 560 c. 650 d. 720

8. The simple interest on Rs.68,000 at $16\frac{2}{3}$% per annum for 9 months
ஆண்டுக்கு $16\frac{2}{3}$% வீதம் 68,000க்கு 9 மாதத்திற்கான தனி வட்டியானது
a. Rs.1, 200 b. Rs. 8,050 c. Rs. 8,500 d. Rs. 1,020

9. The simple interest on a sum of money will be Rs. 200 after 5 years. In the next 5 year principle amount is tripled. What will be the total interest at the end of the $10^{th}$ year
ஒரு தொகைக்கான தனி வட்டியானது 5 வருடத்தில் ரூ 200 அடைகிறது. அடுத்த 5-வருடத்தில் முதலீட்டு தொகையானது 3- மடங்காகிறது எனில் 10-வருட முடிவில் கிடைக்கும் மொத்த வட்டி தொகை எவ்வளவு?
a. ₹800 b. ₹650 c. ₹700 d. ₹600

10. If a certain sum at a certain rate of simple interest amounts to 3,810 in 3 years and 4,890 in 7 years, then the sum and rate of interest are
ஒரு தொகை தனி வட்டிப்படி ரூ. 3,810-ஐ 3 வருடத்திலும் ரூ. 4,890-ஐ 7 வருடத்திலும் வட்டியுடன் கொடுக்கிறது. எனில் அசல் மற்றும் வட்டி வீதமானது.
a. ( 3,000 & 3.5) b. (4,000 & 9) c. (4,000 & 4.5) d. (3,000 & 9)

11. A sum of money triples itself at 8% per annum over a certain time. The time taken is
ஒரு குறிப்பிட்ட அசலானது ஆண்டுக்கு 8% வட்டி வீதத்தில் மூன்று மடங்காகுவதற்கு பிடிக்கும் காலம்
a. 20 years b. 22 years c. 25 years d. 30 years.

12. A certain sum of money amounts to Rs. 10,080 in 5 years at 8%. Find the principal

ஒரு குறிப்பிட்ட தொகையானது 8% வட்டி வீதத்தில் 5 ஆண்டுகளில் ரூ.10,080 ஆகிறது. அசலைக் காண்க.

a. Rs. 7,200 b. Rs. 7,000 c. Rs. 7,300 d. Rs. 6,200

13. If simple interest for a sum of Rs 3100 for 4 years is Rs 40 more than the simple interest of Rs 2900 for the same duration at the same rate of interest then the rate of interest is

ரூ. 3,100 க்கு 4 வருடங்களுக்கு குறிப்பிட்ட வட்டி விகிதத்தில் வரும் தனிவட்டி ரூ. 2,900 க்கு அதே காலத்திற்கு அதே வட்டி விகிதத்தில் வரும் தனிவட்டியை விட ரூ. 40 அதிகமாக உள்ளது எனில் வட்டி விகிதமானது

a. 2% b. 5% c. 8% d. 10%

14. Mr. X borrowed Rs.5,000 – on 7th of June 2006 and returned it on 19th August 2006. Find the amount he paid, if the interest is calculated at 8% per annum

திரு X என்பவர் 7.6.2006 அன்று ₹ 5,000ஐ கடனாகப் பெற்று அதை 19.8.2006 அன்று திரும்ப செலுத்தினார் ஆண்டிற்கு 8% வீதம் வட்டி கணக்கிடப்பட்டால் அவர் செலுத்திய தொகை எவ்வளவு?

a. ₹5140 b. ₹5080 c. ₹ 5210 d. ₹5280

15. A sum of money triples itself at 20% interest per annum, over a certain time. Find the number of years.

ஒரு குறிப்பிட்ட அசலானது 20% ஆண்டு வட்டி வீதத்தில் எத்தனை ஆண்டுகளில் மூன்று மடங்காகும்?

a. 10 years b. 20 years c. 25 years d. 15 years

16. Find simple interest on Rs. 10,950 for 42 days at 10% p.a.

ரூ.10,950 என்ற அசலுக்கு 42 நாட்களில் ஆண்டிற்கு 10% தனிவட்டி முறையில் கிடைக்கும் வட்டி எவ்வளவு?

a. Rs. 116 b. Rs. 74 c. Rs. 126 d. Rs. 108

17. Vishal deposited Rs.200 per month for 5 years in a recurring deposit account in a post office. If he received Rs. 15,660. Find the rate of interest

விஷால் ஒவ்வொரு மாத துவக்கத்திலும் ரூ.200 ஐ ஓர் அஞ்சலகத்தில் 5 ஆண்டுகளுக்கு செலுத்தி வந்தார் முடிவில் அவர் ரூ.15,660 பெற்றார் எனில் வட்டி வீதம் என்ன?

a. 12% b. 5% c. 10% d. 9%

18. A man invested $\frac{1}{3}$ of his capital at 14%, $\frac{1}{4}$ at 16% and the remainder at 20%. If his monthly income is Rs. 561, the capital is

ஒருவர் தனது மூலதனத்தின் $\frac{1}{3}$ மடங்கை 14% வட்டிக்கும், $\frac{1}{4}$ மடங்கை 16% வட்டிக்கும், மீதத்தொகையை 20% வட்டிக்கும் முதலீடு செய்கிறார். அதன் மூலம் அவர் மாத வருமானமாக ரூ. 561 பெறுகிறார் எனில் அவர் முதலீடு செய்த மொத்த தொகை எவ்வளவு?

a. 3300 b. 3920 c. 3320 d. 6732

19. A sum of money at simple interest amounts to Rs. 815 in 3 years and to Rs. 854 in 4 years. The sum is

ஒரு அசலானது தனிவட்டியில் 3 வருடத்தில் ரூ.815 ஆகிறது. அதுவே, 4 வருடத்தில் ரூ. 854 ஆகிறது என்றால் அந்த அசல் எவ்வளவு?

a. Rs. 650 b. Rs. 690 c. Rs. 698 d. Rs. 700

20. What is the sum, if the simple interest is Rs. 90 at the 6% rate of interest for 3 years?

6% வட்டி வீதத்தில் மூன்று ஆண்டுகளுக்கு தனிவட்டி ரூ.90 எனில் அசல் எவ்வளவு.

a. 1000 b. 1500 c. 500 d. 750